சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5 Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# பாரதியார் வாழ்க்கையும் அரசியல் கொள்கையும்

க. சிவராஜ்
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம்,
திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழு" எனத் தொல்காப்பியர் சுூற்றுப்படுத்தினார். சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கையும் அவரின் படைப்பாக்கமும் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றாற்போல புதிய பரிமாணத்தன்மையோடு விளங்கியது என்பது தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிகளே சான்று. பைந்தமிழ் மரபறிந்து இலக்கியத்தை புதுமையுற வடித்தளித்து கொடுத்த பெருமை மகாகவிக்கு உண்டு. அந்த வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் சுப்பிரமணிய பாரதி தவிர்க்க இயலாதவர் ஆகிறார். அவர் தமிழ் எழுத்து வகைகளான கட்டுரை, சிறுகதை, புதினம், கவிதை எனப்பலவற்றில் புதுமையை மலர வைத்து இலக்கியத்தின் வாயிலாக சமுதாய சீர்த்திருத்தங்களை ஏற்படுத்த முயற்சித்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தனது எழுத்துத் திறத்தால் விடுதலை உணர்வை மக்களுக்குள் ஏற்படுத்தினார். கவிஞர் என்பதைத் தாண்டி ஆசிரியர், பத்திரிக்கையாசிரியர், மொழிப்பெயர்ப்பாளர், எழுத்தாளர், அரசியல் விமர்சகர், பேச்சாளர், நூலாசிரியர், மொழி பற்றாளர், விடுதலை போராட்ட வீரர் என்கிற பன்முகத்தன்மை இவருக்கு உண்டு. தேசிய உணர்வை தனது கவிதையின் வாயிலாக மக்களிடைத்தே வேறூன்ற காரணமாக இருந்ததால் தேசிய கவி என்று போற்றப்படுகிறார். *1882-ஆம் ஆண்டு டிசம்பர்11 ஆம் தேதி*'பூர்விகக் கிராமமான சீவலப் பேரியை விட்டு ஜீவனோ பாயத்தையும் மேம்பாட்டையும் கருதி எட்டயபுரம் ஜமீன்தாரின் ஆதரவை நாடி எட்டயபுரத்துக்குக் குடி வந்து வாழ்ந்த மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்த சின்னச்சாமி ஐயருக்குப் புதல்வராகப் பிறந்தவர் சுப்பரமணியன்" அவர் மூல நட்சத்திரத்தில் பிறந்தார். பொருளாதார தவிப்பில் உழலும் ஏழ்மை குடும்பத் தலைவனுக்கு சுப்பிரணியன் பிறந்திருந்தாலும் கவிதைபாடுவதில் சுப்பிரமணியனுக்கு அலாதி ஆர்வம். ஆனால் சின்னச்சாமி சுப்பிரமணியனை கணித அறிஞனாக உருவாக்க வேண்டும் என்று நினைத்தார். இளமையில் பாரதி எட்டயபுத்திலிருந்த புலவர் பெருமக்களோடு தம் தந்தைக்குத் தெரியாமல் நட்பு கொண்டு அவர்களோடு சேர்ந்து கவி பாடிக்கொண்டிருந்தார். "ஒரு பாட்டில் எத்தனைக்கெத்தனை அசுத்தமான வார்த்தைகள் சேர்கின்றனவோ அத்துனைக்கத்தனை சுவையதிகம் என்பது கவுண்டனூர்ப் புலவர்களின் முடிவு"என்று சின்னச் சங்கரன் கதையில் ஜமீன்தாருக்கு முகஸ்துதி பாடியும் அவருக்கு குளத்து முதலை போலவும் வாழ்ந்த அப்புலவர்களின் கதியை சுப்பரமணியனே எடுத்துரைக்கிறார். சிறிது காலத்திற்கு பிறகு "ஏழாம் வயதிலே கவிதைகள் பாடத் தொடங்கி விட்டார். எட்டு, ஒன்பது, பத்து வயதிகளிலேயே பலரும் புகழும் வண்ணம் பல கவிதைகள் இயற்றினார் பதினோராம் வயதில் எட்டையபுரம் அரண்மனையில் அரசால் 'பாரதி' எனும் பட்டம் அளிக்கப்பட்ட போதுதான் பாரதி உலகத்தாரின் கண்களுக்கு தெரியலானார்"என்று நாம் அறிகிறோம். பிற்காலத்தில் சுப்பிரமணியன் என்ற தன் இயற்பெயரோடு 'சுப்பிரமணி பாரதி' என்று அழைக்கப்பட்டார். பின் 'பாரதியார் என்ற சிறப்பு பெயர் பெற்றார். பாரதிக்கு தெய்வ வரமாகக் கவிபாடும் ஆற்றல் அமைந்தது. அந்த கவிதைகளில் பாடுபொருளாக அவர் அமைத்துக் கொண்டவை அனைத்தும் தம்முடைய வேதாந்த ஞானத்தால்தான். இவ்வாறு இளமையில் புலமைப்பட்டம் பெற்றாலும் அதனை நல்ல முறையில் வளர்க்கக் கூடிய நிலையில் சின்னச்சாமியின் குடும்பம் இல்லை. பாரதியார்

தாம் வாழ்ந்த காலத்தில் உரியவாறு அங்கீகரிக்கப்படவில்லை. போற்றப்படவில்லை என்னும் கருத்து நிலவி வருகிறது. "பாரதிக்கு இன்று கிடைத்திருக்கும் புகழும், பாராட்டுதலும் அன்று கிடைக்கவில்லை என்பது அறிஞர் புரிந்துகொள்ளக் கூடிய விஷயம். பிற நாட்ட இலக்கிய சரித்திரங்களைப் பார்த்தால், இந்த நிலைமை பல புலவர்களுக்கு ஏற்படுவது சகஜம் என்பது தெரியவரும். தெய்வப்புலமை பெற்றவர்களில் பெரும்பாலோருக்கும் சிறந்த சிந்தனைச் செறிவுள்ள எழுத்தாளர்கள் அநேகருக்கும் புகழும் பாராட்டுதலும், ஆரம்பத்திலேயே கிட்டியதில்லை" என்று ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் விளக்குவதன் மூலம் அறியலாம். பாரதிக்கும் இதே நிலை இருந்தது.

சின்னச்சாமி ஐயருக்கு தன்து மகனிடத்தில் அளவில்லாத அன்பு. மகன் அடம்பிடிக்கும் போதெல்லாம் அடித்துத் தொந்தரவு செய்ய அவருக்கு மனம் இருந்ததில்லை. பாரதியாருக்கு மிகவும் மெலிந்த உடல். தாம் அமர்ந்திருக்கும் இடத்திலேயே கை, கால், உடம்பை அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு அவருடைய பால்ய நட்புகள் கேலியாகச் சிரிப்பதுண்டு. பாரதியாரின் குழந்தை பருவத்திலேயே அவருடைய தாய் இறந்துபோனார். அதனால் தாய் இல்லாத பிள்ளை என்பதால் சின்னச்சாமி ஐயர் தமது மகனைத் தொட்டு அடிப்பதற்கு மனங்கொள்ளவில்லை. தாயைப் பற்றிய பிரக்ஞை பாரதியார்க்கு இருந்ததில்லை. தாய் அருகில் இல்லாத குறை பாரதியாரை அடிக்கடி நோகடித்தது. நேற்று பிறந்த பெண் குழந்தையும் பாரதியாருக்கு அம்மாதான். வயதுக் கணக்கு அவருக்கு ஒரு மரியாதை கணக்கு இல்லை. மனைவி இறந்து உடன், சின்னச்சாமி ஐயர் இன்னொரு திருமணம் செய்து கொண்டார். அவர்களின் மூலம் ஓர் ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. தொழிற்சாலை நிறுவி இந்தியாவில் மேம்பட வேண்டும் என்று இலக்கு கொண்டு செலவழித்த பணமெல்லாம் வீண் செலவானது. சொத்து எல்லாம் இழந்து மன உலச்சலுக்கு ஆளானார் சின்னச்சாமி. பாரதியாரை மேற்படிப்பு படிக்க வேண்டிய சிந்தனை இல்லாமல்போனது. அதன் பிறகு சின்னச்சாமி ஐயர் காலமானார். குடும்பம் தவித்து தத்தளித்தது. குடும்பத் தலைவன் மறைந்தால் அவருக்குப் பின் அவரை அண்டி வாழ்ந்து வந்தவர்கள் திக்கற்றுத் தவிப்பது சோகத்தின் உச்சம். சின்னச்சாமி ஐயர் தனது கருத்தில் எப்போதும் பிடிவாதமாகவே இருப்பார் என்று பாரதியாரே பதிவிட்டடிருக்கிறார். இயந்திரத்தின் செலவால் சொத்து பரிபோனது. பாரதியார் வாழ்க்கை திசையற்று போனது. இளமையிலேயே திருமணம்; தந்தைக்கு தொழிலில் பெருத்த இழப்பு; குடும்ப வறுமை; தந்தை மரணம்; அதனால் பாரதியின் படிப்புக்குப் பங்கம் என்று யாவும் இழந்து வாழ்க்கை பிடிப்பு இல்லாமல் தவித்தார்.

"தொட்ட தொழில் துறை
ஆங்கிலர் சதியால்
பட்ட மரமாக
வெட்டிரும்பு போலிருந்த தந்தை
வெட்ட வெளித் துரும்பானார்
பதினான்கு வயதில் திருமணம்
பதினைந்து வயதில் அப்பா மரணம்
வறுமை மிதித்த சிறுமைச் சேற்றில்
புதைந்து போனது
புகழ் பெற்ற சின்னச்சாமி அய்யர் குடும்பம்"

என்று பாரதியாரின் குடும்ப பின்னனியை சிற்பி பாலசுப்பிரமணி விளக்குகிறார். அதன் பிறகு செல்லாம்மாவை அவரின் பிறந்த ஊர்க்கே அனுப்பி வைக்கப்பட்டார். விளையாடி, கல்வி கற்று எதிர்காலத்தை வளமாக்க அடித்தளமிடும் வயதில் குடும்பத்தைப் பேணும் பொறுப்பு பாரதியாரின் தலையில் இறங்கியது. பாகீரதி பாட்டியோடு காசியில் குடியிருக்கும் குப்பம்மா அத்தை வீட்டுக்கு புறப்பட்டார்.

"சாகும் வயதில் போகிற காசிக்கு
வாழும் வயதில் புறப்பட்டேன் நான்"

என்கிற மனச்சுமையோடு காசியை நோக்கி

பயணமானார். சங்க இலக்கயித்தில் இருந்து தொடர்ந்து நீதிக் கருத்துக்களும் உறவுகளைப் பேணும் அன்பு முறைகளும் கற்பிக்கப்பட்டு வருகிறது. "பாரதி இளவயதிலேயே தனது தாய், தந்தை இருவரையும் இழந்த காரணத்தினால் அன்பிற்கு ஏங்கித் தவித்த ஒரு குழந்தையின் மனோபாவம் அடிக்கடி நிகழும். அப்போதெல்லாம் அந்த அன்பினை இயற்கையின் மீதும் சக மனிதர்கள் மீதும் செலுத்துவதோடு சக மனிதர்களை அன்புசெலுத்த ஆணையிட்டான்" உங்களுக்கு தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர் என்றுஅன்பின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணர்த்தினார். மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் மனிதர் என்ற அடைமொழி பொருந்துவதில்லை. வெகு சிலருக்கு மட்டுமே அது பொருந்துகிறது. அன்பு கொண்டவர்கள் நல்ல மனிதர்களாக வாழ்கிறார்கள் என்பது அவரின் கருத்தாகும். பாரதியாரின் தந்தை மிகக் கண்டிப்புடன் வளர்த்தார். பிற குழந்தைகளுடன் சேர்ந்து ஓடியாடி விளையாட கூட விடாமல் தடுத்தார். தனிமை அவர்க்கு பழகிப்போனது. தனியே உட்கார்ந்து சிந்திப்பதே வழக்கமாகக் கொண்டிருந்தார். அதை தனது சுயசதரிதையிலும் பாரதியார் பதிவு செய்திருக்கிறார்.

தாய் காலமான பிறகு, தந்தைக்கு தொழில்துறையில் இழப்பு ஏற்பட்டு மரணமடைந்த பிறகு, காசிக்குச் சென்று பல்கலையில் சேர்ந்து பயின்றார். ஆனால் முழுமையாக பயிலாமல் பாதியிலேயே தமிழகம் திரும்பி விட்டார். பாரதியார் தனக்கென்று தத்துவங்களை வகுத்துக் கொண்டார். அவர்க்கென்று தனி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டாலும் காலத்தோடும் உலகத்தோடும் ஒட்டி வளர்ந்தார். அவர் நம் சமுதாயத்தின் தத்துவ மரமாய் தற்போது விருட்சம் விட்டு வளர்ந்திருக்கிறார். அவருடைய கவிதைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, கட்டுரைகளை எடுத்துக் கொண்டாலும் சரி அவைகளிலே சென்ற நூற்றாண்டிற்கும், இந்த நூற்றாண்டிற்கும் உலகத்தில் சிறந்து விளங்கக் கூடிய ஜனநாயகப் பண்பாட்டை நாம் பார்க்க இயலும். அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் சமுதாய வரலாற்றோடு வளர்ந்து செல்கிறார். நமது பாரத சமுதாயம் வரலாற்று ரீதியாக வளர்ந்து கொண்டே போகக்கூடிய வளர்ச்சியின் அடிப்படையில் கணக்குப்போட்டு வந்த வகையிலே பல்வேறு பொருள்களை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். அவர் வாழ்க்கை நிலை வறுமையாக போயினும் பாரத நாட்டின் பெருமையையும் ஒட்டுமொத்தமாக மனத்தில் நிறுத்தி உலகத்திலே உள்ள மனித வர்க்கம் எப்படி வாழ வேண்டும் என்று வழி காட்டுகிறார். இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமைப்பாட்டு உணர்ச்சியோடு வாழ வேண்டுமென்று உணர்த்தி சென்றவர் பாரதியார்.

"திறம் பாடவந்த மறவன் புதிய
அறம் பாடவந்த அறிஞன்"

என்று கனகசுப்புரத்தினம் பாரதியின் சமூக அறச்சிந்தனையை இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார். பாரதிக்கு இயல்பிலேயே தேசச்சிந்தனை உண்டு. விடுதலை வீரர்களையும் அவர்களின் அரசியல் ஆவேசத்தையும் தனது எழுத்துகளில் காண்பித்தான். அவைகளை மக்களுக்கு பரப்பவும் செய்தான். "பாதகம் செய்பவர்களைக் கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா" என்கிற ரௌத்திரம் அவனுக்குள் இருந்தது. வணிகம் செய்ய வந்தவன் அரசியல் சட்டத்தை இயற்றி நம்மை ஆள்கிறானே என்கிற துடிப்பு அவனுக்குள் தீ மூட்டியது.

மாதரையும் மக்களையும் வன்கண்மையாற் பிரிந்த
மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் கண்கிலையோ

என்று தன் வாழ்வு வறுமையில் கிடந்தாலும் தேசத் தலைவர்களின் இன்னல்களைக் கண்டு வெதும்பிய பாரதி, தமிழகத்திலும் இந்தியாவிலும் விடுதலை உணர்வை எழுத்தால் மூட்டிட முடியும் என்பதை ஆங்கிலேய அரசுக்கு உணர்த்தினான். 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் அரசியல் சூட்சமங்களைக் கனித்து அதை நாட்டுக்குடிகளுக்கு உரைக்கச் சொல்லி பல மக்கட்கட்கு அரசியல்

புரிதலை தந்தவன் பாரதி என்று துணிந்து சொல்லலாம். "மாணவர்கள் அரசியலில் ஈடுபட வேண்டியதில்லை. அரசியல்தான் நாட்டுக்கு அஸ்திவாரம். அதைப்பற்றி மாணவர்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அரசியலைப் பற்றி சிந்திக்காமல் இருப்பது ஆபத்து" என்று காந்தி சொன்னார். இந்தியாவின் ஒற்றுமையை சீர்க்குலைக்க நினைத்து ஆங்கிலேய அரசு வங்கப்பிரிவினையைத் தூண்டியது. அந்தத் திட்டத்தை எதிர்த்து சென்னை மெரினாவில் மாணவர்கள் போராடிய போது தலைமை தாங்கி உரை நிகழ்த்திய பாரதி மாணவர்களுக்குப் பண்பாட்டு அரசியல் நோக்கத்தை புரிய வைத்தான்.

விடுதலை போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அரசியல் சூழலில் மாற்றத்தை கொண்டு வந்த சிங்காரவேலர் மக்கள் எந்த சூழலிலும் வேறுபட்டு விட்டுக்கூடாது என்று "சுயராஜ்யத்தை பாதுகாக்க ஒரு மக்கள் படை இன்றியமையாதது" என்கிற கருத்தை பதியவைக்கிறார். ஜல்லிக்கட்டுப் பிரச்சனையில் தமிழகம் ஒற்று கூடியது, மகாராஷ்டிராவில் 35000 விவசாயிகள் ஒற்றிணைந்து 180 கிலோ மீட்டர் நடந்தே சென்று போராடி தீர்வு கண்டார்கள். மக்களின் பிரிவு தவறான அரசியல் நோக்கத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே" என்று புரட்சிகவி ஒன்று சேரும் சிந்தனையைக் கொடுக்கிறான். அரசியல் சீரழிவுகளைக் கண்டு நாம் ஒன்று சேர வேண்டும் என்பது பாரதியின் அறிவுறுத்துதலாகும். புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாநிலம் கடந்து உதவிக்கரம் நீட்டுகிறார்கள் என்றால் ஒற்றுமையின் சிறப்பை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். "சோர்வும் வீழ்ச்சியும் தொண்டனுக்கில்லை" இன்றைய அரசியல் சீர்த்திருத்தவாதிகளுக்கு பாரதியின் ஊக்கம் கொடுக்கும் வரிகள் இவை. தன்பெண்டு தன் பிள்ளை தான்என்று இருக்கும் அரசியல் தலைவர்களை இந்தச் சமூகம் பார்த்து கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு பல ஊழல் குற்றச்சாட்டுகளை நாம் எடுத்துக்காட்டாக வைத்திருக்கிறோம். "எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்று எந்த அரசியல் பொறுப்பு வகிக்காத பாரதி சமுதாயப் பொறுப்போடு வாழ்ந்தான் என்பதுதான் அவனுடைய அறவாழ்க்கைக்கு மாட்சியாகிறது.

"வங்கத்திலே ஓடிவரும் நீரின் மிகையால்
வையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"

இவ்வரிகள் பாரதியாரின் தேசிய சிந்தனைக்கு சான்று. நதிகளை வைத்து அரசியல் செய்யும் ஆட்சியாளர்கள் பாரதியின் தேசிய சிந்தனையைப் பின்பற்றி நடந்திடும் நாள் எந்த நாளோ?. விஞ்ச் ஆளுநரை சந்தித்தார் வ. உ. சி. அவர்கள் இருவரின் உரையாடல்களையும் பாரதி தன் கவிதையிலே சொல்லும் போது விஞ்சிற்கு வ. உ. சி பதில் இப்படி இருந்ததாக பாரதி குறிப்பிடுகிறான்.

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?

நீங்கள் மட்டும் மனிதர்களோ இது நீதிமோ? என்று. சொந்த நாட்டில் மக்கள் அடிமையாக வாழ நேரிட்டால் அதைவிட அரச துரோகம் இருந்து விடாது. இலவசத்திற்கும் நிவாரணத்திற்கும் சாலைகளில் நின்று கையேந்துகிற நிலை நம் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அரசின் பிற்போக்குத்தனத்தை எதிர்க்காமல் விதி வந்த வழி வாழும் மக்கள் சகித்துக் கொண்டு சதா வயிற்றிற்காக மட்டும் வாழும் சிறுமை வாழ்க்கை தான் வாழ்கிறார்கள். ஆனால் பாரதி அப்படி இல்லை. வேடிக்கை மனிதரைப் போல நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ? என்றும் "மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள் ஆங்கே ஆகவென்று உதித்தது பார் யுகப்புரட்சி" என்றும் தன்னை ஆங்கிலேய அரசை எதிர்த்து பேசி புரட்சியளனாய் அடையாளப்படுத்தி கொண்டான்.

"மனித சமுதாயத்தில் ஒழுக்கமும், நல்ல அரசியலும் ஏற்பட வேண்டுமானால் அய்யோக்கியர், துரோகிகளை, மானமற்ற இழிமக்கள்ளப் பொதுவாழ்வில் தலைகாட்டாமல்

விரட்ட வேண்டும்" தமிழகத்தில் பல அரசியல் ரீதியான கொள்கைகள் ஏற்பட காரணமாக இருந்த பகுத்தறிவு பகலவன் பெரியர் இப்படி அரசியல் அழுக்கர்களை ஏசுவார். மக்களை சாதியால், மதத்தால், இனத்தால், மாநிலத்தால் பிரித்தாளும் சூழ்ச்சிகளைக் கொண்டுள்ளவர்களுக்கு பாப்பா பாட்டில் பாரதி சொல்கிறான் "உயர்வு தாழ்வு கொள்ளல் பாவம்" என்று. தமக்கென முயலா நோன்றான் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" என்று அரசனுக்கு புறநானூறு வரையறை செய்கிறது. பாரதி "எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்பான்.

மன்பதை காக்கும் அரசர் தாம் அற
மாட்சியைக் கொன்று களிப்பாரோ?

என்று தனது பாஞ்சாலி சபதத்தில் தர்மன் செய்த சூதின் இழிசெயலை பாஞ்சாலி இடித்துரைத்து சொல்வதைப் போல பாரதி எழுதியிருப்பான். நல்ல மன்னன் என்பவன் நாட்டிற்கு அரணாக இருந்து, நாட்டு வளர்ச்சிக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

"பிணியின்மை செல்வம் விளைவின்ப ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ வைந்து"

மக்கள் நோயின்றி வாழ்தல் மக்கள் பொருள்வளம் பெற்றிருத்தல் விளைபொருட்கள் மிகுந்திருத்தல் கல்வி மற்றும் கலைகளை அனுபவத்து மகிழ்தல் மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாடு அவசியம் பெற்றிருக்க வேண்டிய அடிப்படை தேவைகளகும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். மேற்சொன்னப்பட்ட ஐந்தும் இல்லாத நாடு ஆபத்தான நாடு ஆகும். நல்ல தலைவன் இல்லாத நாடு அதைவிட ஆபத்தானதாகும்.

தனிமனித தேவைகளைப் பூர்த்தியானல் அங்கு நல்ல அரசியல் நடக்கிறது என்று அர்த்தப்படும். பாரதி, பீஜித்தீவில் மாட்டிக்கொண்ட கொத்தடிமைகளைப் பற்றி கவலைப்படுகிறான்: ரஷ்ய போர்க்கு வருத்தப்படுகிறான்: உலக அரசியல் சித்தாந்தம் பாரதிக்கு உண்டு என்பதற்கு இந்நிகழ்வுகள் ஒரு சான்றாகிறது.

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விசாலைகள் சமைப்போம்"

என்று நம் நாட்டிற்கான தொழில் முன்னேற்றத்தை கனவு கண்டவன். "ஆணுக்குப் பெண் இளைப்பில்லை" என்று பெண் முன்னேற்றத்தை உரைத்தவன். "மேலை கடல்கள் முழுவதும் கப்பல்கள் விடுவோம்": "சந்திர மண்டலத்து இயல்கண்டு தெளிவோம்" என்கிற விஞ்ஞான முன்னேற்றத்தை பேசியவன். ஒரு நாட்டிற்கு தேவையான அடிப்படை கொள்கைகளை பாரதியாரின் கவிதைகளில் காணலாகின்றன. அரசியல் தலைவனாக தன்னை உள்ளுறப்படுத்தி கொண்டு பாரதி சிந்ததித்து வாழ்ந்திருக்கிறான். ஊருக்கு உழைத்திடல் யோகம்: தேசத்தைக் காத்தல் செய் என்று சொல்லிய பாரதி நம் நாட்டை நாமே ஆளும் காலம் என்று வருமென்று ஏங்கியவனாவான். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்று இளங்கோவடிகள் கூறுவதை போல அரசியலில் பிழைப்போர்க்கு அந்த அறம் என்ன செய்ய செய்யப்போகிறது?

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தனது எழுத்துத் திறத்தால் விடுதலை உணர்வை மக்களுக்குள் ஏற்படுத்தினார். கவிஞர் என்பதைத் தாண்டி ஆசிரியர், பத்திரிக்கையாசிரியர், மொழிப்பெயர்ப்பாளர், எழுத்தாளர், அரசியல் விமர்சகர், பேச்சாளர், நூலாசிரியர், மொழி பற்றாளர், விடுதலை போராட்ட வீரர் என்கிற பன்முகத்தன்மை இவருக்கு உண்டு. தேசிய உணர்வை தனது கவிதையின் வாயிலாக மக்களிடைத்தே வேறூன்ற காரணமாக இருந்ததால் தேசிய கவி என்று போற்றப்பட்டார். பாரதியாரின் வாழ்க்கையும் இந்திய தேசிய அரசியலுக்கும் ஒற்றுமை உண்டு.

௸